பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

48 ] சென்னை—ஞாயிறு, மார்ச் 9, 1947. [ விலை அணா 2

## வங்காளப் பிரிவினை

காந்தியடிகள் ஹெய்ம்சார் என்னும் கிராமத்தில் மார்ச் மாதம் முதல் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் வங்காளப் பிரிவினை சம்பந்தமாக கீழ்க் கண்டவாறு கூறினார் :—

வங்காளத்தை ஹிந்துக்கள் பெரும் பான்மையோராக உள்ள ஒரு மாகாணமாகவும் முஸ்லிம்கள் பெரும்பான்மையோராகவுள்ள ஒரு மாகாணமாகவும் இரண்டாகப் பிரித்து விட வேண்டு மென்று ஒரு யோசனை கூறப்படுகிறது. அது சம்பந்தமாக இன்று மாலை சிலர் என்னிடம் யோசனை கேட்டார்கள். ஒரு காலத்தில் வங்காளமானது இரண்டாக பிரிக்கப்பட்ட பொழுது அதை எதிர்த்து போராடி அந்தப் பிரிவினையை ரத்து செய்தது. இப்பொழுது சமாதானத்தை நிலவும்படி செய்வதற்காக வங்காளத்தை இரண்டாகப் பிரித்துவிட வேண்டிய நிலைமை உண்டாகி இருப்பதாக சிலர் கருதுகிறார்கள். நான் பிரிவினையை எந்தக் காலத்திலும் எதிர்த்து வந்திருக்கிறேன். ஆனால் உடன் பிறந்த சகோதரர்கள் கூட ஒருவருக் கொருவர் சண்டையிட்டு பிரிந்து கொள்வதுண்டு. நிர்ப்பந்தத்தின் பேரில் பல விஷயங்களை இந்தியாவானது ஒப்புக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் என்னுடைய முறை வேறு. எந்தக்காலத்திலும் நான் நிர்ப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆதலால் இந்தியா முழுவதிலும் பெரும்பான்மையோராகவுள்ள ஹிந்துக்கள் நிர்ப்பந்தத்தின் பேரில் எல்லோரையும் ஒன்றாக இருக்கும்படி செய்ய விரும்புவார்களானால் நான் அதையும் எதிர்க்கவே செய்வேன். நிர்ப்பந்தத்தின் பேரில் ஒற்றுமை உண்டாக்குவதை நான் எதிர்ப்பது போலவே நிர்ப்பந்தத்தின் பேரில் பிரிவினை உண்டாக்கு வதையும் நான் எதிர்ப்பேன்.

இதற்குமுன் பிரிட்டிஷ் அரசாட்சியின் சரித்திரம் எந்த விதமாக இருந்த போதிலும் இப்பொழுது பிரிட்டிஷார் கூடிய சீக்கிரத்தில் வெளியேறி விடப் போகிறார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆதலால் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானத்துடனும் நட்புடனும் வாழ வேண்டு மென்று உறுதி செய்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. அப்படி நடந்து கொள்ளா விட்டால் உள் நாட்டு சண்டையே உண்டாகும். அதனால் தேசம் சின்னா பின்னமாகப் பாழ்பட்டுப் போகும். வருங்காலத்தில் என்ன நேரப்போகிற தென்பதை யாரும் சொல்ல முடியாது. ஆனால் ஜனங்கள் மட்டும் உண்மையாகவும் அந்தரங்க சுத்தியாகவும் தூய்மையான ஹிருதயத்துடனும் எதையேனும் ஏகோபித்து விரும்புவார்களானால் அடியார்க்கு அடியனாக இருக்கும் ஆண்டவன் அந்த விருப்பத்தை நிறைவேற்றாமல் இருக்கவே மாட்டான் என்று நான் உறுதி கூறுகிறேன்.

## காந்தி யடிகளின் பீஹார் யாத்திரை

காந்தி யடிகள் ஹெய்ம்சார் கிராமத்துக்கு பிப்ரவரி 24-ம் தேதி வந்து சேர்ந்தார். அங்கு சில நாட்கள் தங்கிவிட்டு பிறகு தம்முடைய புனித யாத்திரையின் மூன்றாவது பகுதியை ஆரம்பிக்க எண்ணி யிருந்தார். ஆனால் திடீரென்று அதை நிறுத்திக் கொண்டு பீஹாருக்கு புறப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அது சம்பந்தமாக அவர் ஹெய்ம்சாரில் மார்ச் மாதம் முதல் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க் கண்டவாறு கூறினார் :—

'பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் செய்துள்ள அட்டூழியங்களைப் பார்த்தால் வங்காளத்திலுள்ள முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்களை அட்டூழியங்களென்றே சொல்லக் கூடாது. அவ்வளவு மோசமாக நடந்து கொண்டார்கள் பீஹார் ஹிந்துக்கள். வங்காளத்திலுள்ள முஸ்லிம்கள் பீஹாருக்கு போகும்படியாக என்னிடம் பலமுறை வற்புறுத்தினார்கள். ஆனால் அங்கு போகாமலே பீஹார் ஹிந்துக்களை சரியான படி நல்ல விதமாக நடந்து கொள்ளும்படி செய்ய முடியும் என்று நான் நம்பின படியால் அவர்களுடைய யோசனைப்படி நான் பீஹாருக்குப் போக மறுத்து வந்தேன். ஆனால் இப்பொழுது டாக்டர் சையத் மகமத் தம்முடைய காரியதரிசியிடம் ஒரு நீண்ட கடிதத்தைக் கொடுத்து என்னிடம் அனுப்பி யிருக்கிறார்.

டாக்டர் முகமத் நான் அதிகமாக மதிக்கும் நண்பர்களி லொருவர். அவர் பீஹாரில் அபிவிருத்தி மந்திரியாக இருக்கிறார். பீஹாரிலுள்ள நிலைமையைப் பற்றி விசாரித்து அவருக்கு கடிதம் எழுதி யிருந்தேன். அவர் அங்குள்ள நிலைமை சரியாக இல்லை யென்றும் நான் அங்கு வந்து ஹிந்துக்களுடைய க்ஷேமத்தை கவனிப்பது போலவே முஸ்லிம்கள் க்ஷேமத்தையும் கவனிப்பவன் என்பதை முஸ்லிம்களுக்குத் தெரியும்படி செய்ய வேண்டு மென்றும் அவர் எனக்கு எழுதியிருக்கிறார். அவருடைய சொல்லை நான் தட்ட முடியாது. அதனால் பீஹாருக்கு போகவேண்டியவனாக இருக்கிறேன்.

இங்குள்ள முஸ்லிம்களும் ஹிந்துக்களும் சகோதரர்கள் போல் வாழ வேண்டும். இரு வகுப்பாரும் தங்கள் பலவீனத்தை விட்டு விட்டு தாங்கள் எவற்றை புனிதமானவையென்று கருதுகிறார்களோ அவற்றை பாதுகாக்க பழிவாங்காமல் உயிர் துறக்க தயாராக இருந்தால் மட்டுமே இரண்டு வகுப்பார்களும் சகோதரர்கள் போல் வாழ முடியும்.

நான் எங்கிருந்தாலும் இரண்டு வகுப்பாருக்கும் சேவை செய்ய முடியும். இரண்டு வகுப்பார்க்கும் சேவை செய்வதற்காக நவகாளிக்கு வந்தேனே யன்றி இரண்டு வகுப்பார்க்கும் இடையில் மனக் கசப்பை உண்டாக்குவதற்காக வரவில்லை.

ஹிந்துக்களிடத்தில் அஞ்சாமையை உண்டாக்குவதற்காக வந்தேன். அவர்கள் சோர்ந்து

விட வேண்டாம். என்னுடைய தோழர்கள் வழக்கம் போல் இங்கே வேலைசெய்து வருவார்கள். ஹிந்துக்கள் முஸ்லிம்களை விரோதித்துக் கொள்ள வேண்டாம். ஆனல் எந்த விதமான பயமுறுத்தலுக்கும் பயந்துவிடக்கூடாது. உயிரைக் கொடுத்தேனும் எதிர்த்து நிற்கவேண்டும். நான் பீஹாருக்கு போவது முஸ்லிம்களுக்கு உதவி செய்வதற்காக அன்று, அங்குள்ள ஹிந்துக்களுடைய மனத்தை மாற்றுவதற்காகவே போகிறேன். இந்தியா முழுவதிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று விரும்புகிறேன்."

காந்தியடிகள் மார்ச் மாதம் 2-ம் தேதி பிற்பகல் 2-மணிக்கு ஹெய்ம்சாரிலுள்ள தம்முடைய குடிசையிலிருந்து கூப்பிய கைகளுடன் வெளியே வந்தார். இரண்டு மாத காலம் பாதரக்ஷை அணியாமலிருந்தார். இப்பொழுது மறுபடியும் பாதரக்ஷையுடன் காட்சியளித்தார். அதன்பின் ஒரு ஜீப்மோட்டார் வண்டியிலேறி சந்த்பூர் என்னும் இடத்திற்கு வந்தார். அங்கே காலஞ் சென்ற தேசபக்தர் ஹரிதயால் நாக் வீட்டில் தங்கியிருந்தார். மாலையில் பெரிய கூட்டத்தில் பேசி விட்டு கல்கத்தாவுக்கு புறப்பட்டார். இரவு 9-30 மணிக்கு கல்கத்தாவுக்கு அருகிலுள்ள சோத்பூர் என்னும் இடத்திலுள்ள காதி பிரதிஸ்தான் ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார்.

காந்தியடிகள் மார்ச் மாதம் 4-ந் தேதி மாலை பாட்ன நகரத்துக்கு புறப்பட்டுச் சென்ருர். புறப்படுவதற்கு முன் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் கூறியதாவது :—

"நான் நவகாளியில் செய்வதற்காக மேற்கொண்ட வேலை இன்னும் முடியவில்லை. நான் அங்கிருந்ததால் நிலைமை சீர்திருந்தி வந்தது என்று கருதுகிறேன். ஆனல் அது உண்மைதான என்பதை அங்கே கஷ்டப் படுகிறவர்கள் தான் கூற முடியும். பீஹாருக்கு வரும்படியாக அழைப்பு வந்திருக்கிறது. என்னுடைய வாழ்வின் லட்சியத்தை விட்டு விடாமல் அந்த அழைப்பை நான் மறுக்கமுடியாது. நான் ஹிந்து முஸ்லிம் என்று வித்தியாசம் பாராட்டுவதில்லை. அதனல்தான் அழைப்பு வந்ததும் பீஹாருக்குப் புறப்பட்டுச் செல்கிறேன். எவ்வளவு நாள் அங்கே தங்கவேண்டியிருக்குமோ அறியேன். மார்ச் மாதம் 6-ந் தேதி தில்லியில் நடக்கும் காரியக் கமிட்டி கூட்டத்துக்கு வரவேண்டுமென்று ராஷ்டிரபதி கிருபளானி எனக்கு ஒரு அவசர தந்தி அனுப்பியிருக்கிருர். ஆனல் அது நான் இப்பொழுது மேற்கொண்டிருக்கும் வேலையில் சேர்ந்ததன்று. அதனல் அவருடைய விருப்பத்துக்கு இணங்க முடியாமல் இருக்கிறேன்.

நான் மேற்கொண்டுள்ள வேலை வெற்றியடைய வேண்டுமென்று என்னுடன் சேர்ந்து நீங்களும் கடவுளிடம் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பிரார்த்தித்தது போலவே நடந்து கொண்டால் பிரார்த்தனையை கடவுள் நிச்சயம் கேட்டு அருள் செய்வார். தனியாக பார்த்தால் நான் ஒரு அற்ப மனிதனேயாவேன். ஆனல் நீங்கள் என்னுடன் சேர்ந்து பிரார்த்தனை செய்தால் அந்தரங்க சுத்தியாக செய்யப்படும் அவ்வளவு பெரிய பிரார்த்தனையை சர்வ வல்லமையுள்ள கடவுளாலும் மதியாமல் இருக்க முடியாது."

## தென்னுப்பிரிக்க சர்க்காரின் எதேச்சாதிகாரம்

தென்னுப்பிரிக்காவிலுள்ள ஜோகானஸ்பர்க் நகரத்திலிருந்து, கீழ்க்கண்ட தந்தி காந்தியடிகளுக்கு வந்து சேர்ந்தது :—

"தென்னுப்பிரிக்க சர்க்கார் டாக்டர் யுசூப் தாதுவும், டாக்டர் நாயக்கரும் இந்தியாவுக்கு போவதற்கு வேண்டிய அனுமதிச் சீட்டுகளை அவர்களுக்கு கொடுக்க மறுத்து விட்டார்கள். டாக்டர் தாது இந்தியாவுக்கு புறப்படும் கடைசி நிமிஷத்தில் உள்நாட்டு மந்திரியின் தகவலின் பேரில் அதிகாரிகள் அவருடைய அடையாள சர்ட்டிபிகேட்டை கொடுக்க மறுத்து விட்டார்கள். இந்திய ஜனங்களும் ஐரோப்பியரல்லாத பிற ஜனங்களும், ஐரோப்பியர்களில் ஒரு பகுதியாரும் இப்படி சர்க்கார் பிரஜா உரிமைகளை பறிப்பதைப் பற்றி வருந்துகிருர்கள். பீட்டர்மாரிட்ஸ்பர்க் என்னும் நகரத்திலுள்ள "நேட்டால்" என்னும் முக்கியமான ஐரோப்பியப் பத்திரிகையும் ஜோகானஸ்பர்க்கிலுள்ள "ஸ்டார்" என்னும் முக்கியமான ஐரோப்பிய பத்திரிகையும் இந்த அடக்கு முறைச் செயலை கண்டிக்கின்றன. தேச முழுவதும் கண்டன இயக்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள எல்லா ஸ்தாபனங்களையும் இடைக்கால சர்க்காரையும் எங்களை ஆதரிக்கும்படியும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் தாங்கள் தயவுசெய்து வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

இந்த தந்தியை பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்காக அனுப்பிவிட்டு அது குறித்து காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு அறிக்கை வெளியிட்டிருக்கிருர் :—

"இந்த விதமாக தென்னுப்பிரிக்க சர்க்கார் டாக்டர் தாதுவுக்கும் நாயக்கருக்கும் அனுமதிச் சீட்டுதர மறுத்திருப்பதும் அடையாளச் சீட்டை கொடுக்காமல் வைத்துக்கொண்டு இருப்பதும் நியாயமற்ற எதேச்சாதிகார செயல்களாகும். அந்தச் செயல்களுக்கு அவர்கள் சரியான காரணங்கள் கூற வேண்டும். அல்லது யோசனை செய்து அவைகளை ரத்துசெய்ய வேண்டும். அந்த விதமாக அவர்கள் நடந்து கொள்வார்களென்று நம்புகிறேன்."

## காந்தியடிகளின் கால் நடை யாத்திரை

கிழக்கு வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே ஒற்றுமையுண்டாக்குவதற்காக காந்தியடிகள் தம்முடைய கால்நடை புண்ணிய யாத்திரையை நவகாளி ஜில்லாவிலுள்ள ஸ்ரீராம்பூரிலிருந்து ஜனவரி மாதம் 2-ந்தேதி ஆரம்பித்து யாத்திரையின் முற்பகுதியை ஸ்ரீநகர் என்னும் கிராமத்தில் முடித்தார். அதன் பிறகு இரண்டாம் பகுதியை பிப்ரவரி மாதம் 5-ந்தேதி ஸ்ரீநகரிலிருந்து ஆரம்பித்து பிப்ரவரி மாதம் 24-ந்தேதி ஹெய்ம்சார் என்னும் கிராமத்தில் முடித்தார். முதலில் நவகாளி ஜில்லாவிலும் இறுதியில் திப்பரா ஜில்லாவிலும் யாத்திரை செய்தார். நவகாளி ஜில்லாவில் 40 கிராமங்களுக்கும் திப்பரா ஜில்லாவில் 7 கிராமங்களுக்கும் சென்றிருக்கிருர். தினந்தோறும் மாலையில் ஒரு மைல் தூரம் நடந்தது போக மொத்தம் 116 மைல் நடந்திருக்கிருர்.

காந்தியடிகள் தமது பிரயாணத்தை புண்ணிய க்ஷேத்திர யாத்திரையாக கருதியபடியால் நடக்கும்பொழுது பாதரக்ஷை எதுவும் அணிந்துகொள்ளவில்லை. தினந்தோறும் காலை 7-30 மணிக்கு யாத்திரையை ஆரம்பிப்பார். அவருக்கு முன்னல் வங்காளி ஆசிரியர் நிர்மல்போஸ் நடந்து போவார். காந்தியடிகளுக்குப் பின்னல் 20 வயதான அவருடைய பேத்தி திருமதி மனு காந்தி நடந்து செல்வார்.

காந்தியடிகள் நடந்து செல்லும்போது, வழியில் காண்கின்ற முஸ்லிம்களை வணங்குவார். அவர்கள் திரும்ப வணங்கினலும் வணங்காவிட்டாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார்.

போகும் வழியிலுள்ள கிராமங்களில் காந்தியடிகளின் யோசனையின்படி ஊழியர்கள் ஒற்றுமை உண்டாக்குவதற்காகவும் நிர்மாண வேலை செய்வதற்காகவும் உழைத்துக்கொண்டு இருந்தார்கள். காந்தியடிகள் ஒவ்வொரு கிராமத்திலும் அவர்களை சந்தித்து அவர்கள் எவ்விதமாக வேலை செய்ய வேண்டுமென்பதைக் குறித்து அவர்களுக்கு யோசனை கூறினர். கிராமங்களிலுள்ள பெண்களிடம் அவர்கள் எப்படி கிராமக் குளங்களை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் தீண்டாமையை ஒழித்துவிட வேண்டும் என்பதைப் பற்றியும் சொல்லி வந்தார். அவர் முஸ்லிம்களுடைய வீடுகளுக்குபோய் வந்ததோடு பல கிராமங்களில் முஸ்லிம் பெண்களைக் கண்டு பேசவும் செய்தார்.

காந்தியடிகள் தமது யாத்திரை சமயத்தில் பேசிய பிரசங்கங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அச்சத்தை அறவே ஒழித்துவிட்டு சகோதரர்கள் போல் வாழ வேண்டுமென்று உபதேசம் செய்து வந்தார். திப்பரா ஜில்லாவில் சார் என்னும் பகுதியில் நாமசூத்ர ஜாதியாரே அதிகமாயிருக்கிறார்கள். காந்தியடிகள் அவர்களுடைய வீடுகளிலேயே தங்கியிருந்தார். அவர் அந்த பகுதிக்கு சென்றதும் அங்குள்ள ஜனங்களும் தொண்டர்களும் ஜேய் ஹிந்த் என்னும் கோஷத்துடன் அவரை வரவேற்றார்கள்.

## ஒத்துழையாமை

காந்தியடிகள் ஹெய்ம்சார் என்னும் கிராமத்தில் தங்கியிருந்த பொழுது அவரிடம் கீழ்க் கண்ட கேள்வி கேட்கப்பட்டது :—

தங்களுடைய ஒத்துழையாமைக்கும் நேசதேசத்தாருடைய ஒத்துழையாமைக்கும் என்ன வித்தியாசம்?

பதில் : என்னுடைய ஒத்துழையாமையானது கொள்கையிலும் அதனலேற்படும் பலனிலும் முற்றிலும் அஹிம்சை யானதாகும். இதைக்கொண்டு என்னுடைய ஒத்துழையாமை முற்றிலும் திருப்திகரமாக அனுஷ்டிக்கப்பட்டு விட்டதாக கூற முடியாது. கொள்கையும் அனுஷ்டானமும் எப்பொழுதும் ஒன்றுபோல் இருப்பதில்லை. யூக்ளிட் என்னும் கணித சாஸ்திரி கோடு என்பதற்கு கூறும் லட்சணப்படியே எந்தக்கோடும் இருப்பதில்லை. நேசதேசத்தாருடைய ஒத்துழையாமைக் கொள்கையினல் மிகப் பெரிய தீங்குகளே விளைந்தன. அதை யாரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். இன்னும் அதனல் ஏற்பட்ட தீமை தீர்ந்துபோய்விடவில்லை. இன்னும் என்ன என்ன தீமைகள் ஏற்படுமோ தெரியவில்லை.

## இந்திய தேசிய ராணுவம்

இந்திய தேசிய ராணுவத்தை சேர்ந்தவர்கள் நவகாளி ஜில்லாவிலும் திப்பெரா ஜில்லாவிலும் அமைதியை உண்டாக்குவதற்காக கமிட்டிகள் அமைத்து வேலை செய்து வருகிறார்கள். அந்த ஸ்தாபனத்தின் காரியதரிசி திரு. தேவநாத் தாஸும், காப்டன் ஜமானும், சங்கர சிங்கும் காந்தியடிகளை ஹெய்ம்சார் கிராமத்தில் கண்டு பேசினர்கள். அப்பொழுது காந்தியடிகள் அவர்களிடம் கூறியதின் சாரமாவது :—

''நேதாஜி இந்தியாவுக்கு செய்த மகத்தான சேவைகளின் மூலம் அழியாத அமரத்துவம் பெற்றுவிட்டார். இந்திய தேசிய ராணுவத்தார் நேதாஜியிடம் அசையாத பக்தி உடையவர்களா என்பது அவர்கள் இந்தியாவில் நடந்துகொள்ளும் விதத்திலிருந்துதான் தெரிய வரும்.

இ. தே. ரா. வீரர்கள் தங்கள் பலத்தை வீணக்காமல் தங்களுக்குள் ஒற்றுமையாக நடந்துகொள்ளுவதின் மூலம்தான் இந்தியாவுக்கு தலைசிறந்த சேவை செய்ய முடியும். இ. தே. ரா. வீரர்கள் எந்த லட்சியத்துக்காக போர்புரிந்தார்களோ அந்த லட்சியத்தை மறந்துவிடுவார்களானல் அது இந்தியாவுக்கு பெரிய துரதிஷ்டமேயாகும். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக சுயநலமின்றியும் எவ்வித நிபந்தனையின்றியும் பாடுபடுவதே நேதாஜிக்கு செய்யும் தலைசிறந்த பக்தியாகும்.''

## கேள்வியும் பதிலும்

காந்தியடிகள் ஹெய்ம்சார் கிராமத்தில் பிப்ரவரி 26-ம் தேதி மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பிரசங்கம் செய்த பொழுது 3 கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகளும் பதில்களும் வருமாறு :—

1. கேள்வி :—அரசாங்கத்தில் எல்லாம் தவருக நடந்து கொண்டிருக்கும் பொழுது ஒற்றுமை உண்டாக்க சாதாரண ஜனங்கள் என்ன செய்ய முடியும்?

பதில் :—ஏக காலத்தில் இரண்டு சக்திகள் வேலை செய்வதாகவும் ஒன்று மத்தியிலிருந்து வெளியே தள்ளிக்கொண்டு போவதாகவும் ஒன்று மத்தியை நோக்கி இழுத்துக் கொண்டு போவதாகவும் விஞ்ஞானத்தில் ஒரு கொள்கை உண்டு. அதை வாழ்விலும் அனுஷ்டிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அரசாங்கம் நம்மை அதனிடம் இழுக்கின்றது. நல்ல அரசாங்கமா யிருந்தால் நாம் அந்த சக்திக்கு வயப்படுவோம். அதுபோலவே கிராமங்களும் நம்மை இழுக்கின்றன. இந்த இரண்டு சக்திகளும் ஒழுங்காக வேலை செய்தால் ஒழுங்கான ஆட்சி நடைபெறும். அரசாங்கம் சரியாக இல்லாவிட்டால் கிராமவாசிகள் அதை கவனியாமல் தாங்கள் ஒற்றுமையாக வாழவேண்டுமென்று அறிந்து கொள்ள வேண்டும்.

(2) கேள்வி :—சமூகத்தின் நன்மைக்காக தம்முடைய நன்மையை தியாகம் செய்கிறவர்கள் அந்த அளவுக்கு சுயநல மற்றவர்களாவார்கள். அவர்கள் தேசத்தின் நன்மைக்காக சமூக நன்மையை தியாகம் செய்ய முடியுமா?

பதில் :—தம்முடைய சமூகத்தின் நன்மையை மட்டுமே கருதுகிறவர்கள் தம்மையும் தம்முடைய சமூகத்தையும் சுயநலமுள்ளவர்களாக ஆக்கிக் கொள்கிறார்கள். தனி மனிதன் சமூகத்துக்காகவும், சமூகம் தேசத்திற்காகவும், தேசம் உலகத்துக்காகவும் தியாகம் செய்தால்தான் அதை உண்மையான தியாகம் என்று சொல்ல முடியும். கடலிலிருந்து ஒரு துளி ஜலத்தை வேருக எடுத்து விட்டால் அது எவ்வித நன்மையும் செய்ய முடியாமல் போகிறது. ஆனல் அந்த ஜலத் துளி கடலோடு சேர்ந்திருக்குமானல் பெரிய கப்பல்களை தாங்கும் கௌரவத்தை கடலோடு சேர்ந்து தானும் பெற்று விடுகிறது.

3. கேள்வி :—சுதந்திர இந்தியாவில் யாருடைய நன்மை பிரதானமாக கருதப்படும்? பக்கத்திலுள்ள ராஜ்யம் கஷ்டப்படுமானல் சுதந்திர இந்தியா என்ன செய்ய வேண்டும்?

பதி :—மூன்ருவது கேள்விக்குள்ள பதில் இரண்டாவது கேள்விக்குள்ள பதிலில் அடங்கி யிருக்கிறது. உண்மையிலேயே சுதந்திரம் பெற்றுவிட்ட இந்தியா பக்கத்திலுள்ள ராஜ்யங்களுக்கு கஷ்டமேற்பட்டால் உடனே ஓடிப்போய் உதவி செய்ய வேண்டியது கடமையாகும். உதாரணமாக ஆப்கானிஸ்தானம், இலங்கை, பர்மா ஆகிய நாடுகள் கஷ்டப்பட்டால் இந்தியா உதவவேண்டும். அந்த நாடுகளின் பக்கத்திலுள்ள ராஜ்யங்களுக்கும் இந்த விதி பொருந்தும். அதனல் அவைகளுடைய நண்பர்கள் இந்தியாவுக்கும் நண்பர்கள் ஆவார்கள். இந்த முறைப்படி பார்த்தால் தனி மனிதனுடைய தியாகம் உண்மையான தியாகமாக இருக்குமானல் அது உலக முழுவதுக்கும் செய்யக் கூடிய தியாகமாக ஆகிவிடும்.

தரித்திரர் சுதந்திரமாய் வாழ முடியாது—ருஸோ.

தமிழ் ஹரிஜன்

மார்ச்சு 9, ஞாயிறு 1947

## பால்ய விவாகம்.

காந்தியடிகள் சார்சொலாடி என்னும் கிராமத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்திய பொழுது கீழ்க் கண்ட கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது :—

கேள்வி:— நாம சூத்ர ஜாதியைச் சேர்ந்த சிறுமிகளை பன்னிரண்டு அல்லது பதின்மூன்று வயதில் கலியாணம் செய்து கொடுக்கிறார்கள். முன்னால் எட்டு அல்லது ஒன்பது வயதில் கல்யாணம் செய்து கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். மணமகன் மணமகளுக்காக 150-ரூபாய் பரிசம் கொடுக்க வேண்டிய திருக்கிறது. சாதாரணமாக மணமகன் மணமகளைவிட பன்னிரண்டு முதல் பதினைந்து வரை அதிக வயதுடைய வராயிருப்பார். நாம சூத்ரர்களில் ஒரு வகுப்பாரிடையே விதவா விவாகம் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டு வந்தது. ஆனால் அப்படி விதவா விவாகம் செய்யாத வகுப்பாரே உயர்ந்தவர்கள் என்று கருதப்படுவதால் இதுவரை விதவா விவாகம் செய்து வந்தவர்கள் இப்பொழுது அந்த வழக்கத்தை கை விட்டு விட்டார்கள். பால்ய விவாகத்தைப் பற்றியும் விதவா விகாகத்தைப் பற்றியும் தங்கள் கருத்து யாது?

காந்தியடிகள் பதில்:— " இதுவிஷயத்தில் நான் தீர்க்கமான முடிவு செய்திருக்கிறேன் முதலாவதாக பால்ய விவாகம் செய்ய வேண்டிய அவசியமே இருக்கக் கூடாது. நான் பால்ய விவாகத்தை வெறுக்கிறேன். இந்தக் கெட்டவழக்கத்தை நாமசூத்ரர்கள் உயர்ந்த ஜாதி என்று பெருமை பேசிக் கொள்கிறவர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள் என்று எண்ணுகிறேன்.

நான் பரிசம் கொடுக்கும் முறையையும் வெறுக்கிறேன் பரிசம் என்பது சிறுமிகளை விலைக்கு வாங்குவது என்பதை தவிர வேறு இல்லை. நாம சூத்ரர்களிடையும் கூட பல ஜாதி வகுப்புகள் இருப்பதை காண வருத்தமாயிருக்கிறது. உங்களிடையே உள்ள ஜாதி வித்தியாசங்களை எல்லாம் ஒழித்துவிட வேண்டுமென்று நான் வற்புறுத்தி கூற விரும்புகின்றேன். சகல ஜாதி வித்தியாசங்களையும் ஒழித்துவிடவேண்டுமென்றும் தோட்டி என்னும் ஜாதியை தவிர வேறு ஜாதி இருக்கக் கூடாது என்றும் ஹிந்துக்கள் எல்லோரும் தோட்டிகள் என்று கூறிக் கொள்வதிலேயே பெருமையடைய வேண்டுமென்றும் அடிக்கடி கூறி வருவதை நீங்கள் அறிவீர்கள். அதை நீங்கள் மறந்து விடக் கூடாது. அந்த என்னுடைய கருத்து நாமசூத்ரர்களுக்கும் பொருந்துவதாகும்.

பால்ய விவாகத்தை ஒழித்து விட்டால் அநேகமாக பால்ய விதவைகள் என்போர் இருக்கமாட்டார்கள். ஒரு ஆண்மகன் சாகும் வரை ஒரு மனைவியுடனேயே இருக்க வேண்டுமென்பதும் பெண்மகள் ஒரு கணவனுடனேயே இருக்க வேண்டுமென்பதும் என்னுடைய கருத்து. உயர்ந்த ஜாதிக்களிடையே பெண்கள் புருஷனை இழந்து விட்டால் மறுபடியும் கலியாணம் செய்து கொள்ளாமல் விதவைகளாகவே இருக்க வேண்டுமென்ற வழக்கமானது ஏற்பட்டிருக்கிறது. ஆண்களும் மனைவியை இழந்து விட்டால் மறுபடியும் கலியாணம் செய்யாமல் இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. இதை நான் ஒரு இழிவான வழக்கமென்று கருதுகிறேன். சமூகமானது இதன் காரணமாக பரிதாபப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. அதனால் பால்ய விதவைகளை எல்லாம் மறுபடியும் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் கிடையாதென்பது என்னுடைய கொள்கை. ஆதலால் ஆண்களுக்கு உள்ள உரிமைகள் எல்லாம் பெண்களுக்கும் உண்டு.

கேள்வி:— வேறு வேறு மதத்தார் கலப்பு மணம் செய்து கொள்ளலாமென்று தாங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அதே சமயத்தில் புருஷனும் மனைவியும் தத்தம் மதத்தை விட்டுவிடலாகாது என்றும் கூறுகிறீர்கள். அதற்காக சட்ட சம்பந்தமான விவாக முறையை கைக்கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். வேறு வேறு மதத்தைச் சேர்ந்த புருஷனும் மனைவியும் சாகும் வரை தத்தம் மதத்தையே அனுஷ்டித்து வந்ததற்கு உதாரணங்கள் இருக்கின்றவா? சட்ட சம்பந்தமான விவாக முறை என்னும் ரிஜிஸ்தர் விவாக முறையானது மத அனுஷ்டானத்துக்கு புறம்பானது அல்லவா? அதனால் அது மத அனுஷ்டானத்தை பாதிக்கக் கூடுமல்லவா?

காந்தியடிகள் பதில் :—கேள்விகள் பொருத்தமான கேள்விகள். புருஷனும் மனைவியும் தத்தம் மதத்தையே அனுஷ்டித்து வரும் நண்பர்களை நான் அறிவேன். ஆனால் அவர்கள் சாகும் வரை அப்படியே மதம் மாறாமல் இருப்பார்களா என்பதை இப்பொழுது நான் சொல்ல முடியாது. ஆனால் இறக்கும் வரை மதம் மாறாமல் உள்ளவர்கள் இதற்கு முன் இருந்தார்களா இல்லையா என்பதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அப்படிப்பட்டவர்கள் இதற்கு முன் இருந்திருந்தாலும் இருந்திருக்கா விட்டாலும் கோழைகளை கோழைத் தனத்தை விட்டு விடும்படி செய்வதற்காக நாம் அப்படிப்பட்டவர்களை புதிதாக சிருஷ்டிக்க வேண்டும்.

ரிஜிஸ்டர் விவாக முறையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆயினும் சீர்திருத்தத்தின் பொருட்டு அந்த விவாக முறையை மிகவும் அவசியமான சீர் திருத்த முறையாக நான் வர வேற்கின்றேன்.

## கிராம புனருத்தாரணம்

சிட்டகாங் டிவிஷனில் அகதிகளை புனருத்தாரணம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனர் திரு. சௌத்ரி காந்தியடிகள் பேசுவதற்காக ஹெய்ம்சார் கடைதெருவில் ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டத்திற்கு ஏராளமான முஸ்லிம் ஆண்களும், பெண்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது :—

"கிராமபுனருத்தாரண வேலை நன்றாக நடைபெற வேண்டுமானால் முதன் முதலாக கைகூட வேண்டிய காரியம் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையாகும். இது கைகூடாமல் எதுவும் சாத்தியமாகாது.

பெரிய திட்டங்களை வகுப்பதற்கு பதிலாக கிராமங்களில் நல்ல ரோடுகளை உண்டாக்கவும் குளங்களில் உண்டாகும் செடிகளை அப்புறப்படுத்தவும் ஆரம்பிப்பது நல்லது.

கிராமங்களில் நோய்கள் உண்டாகாமல் தடுப்பதற்காக சுத்தத்தை உண்டாக்க வேண்டும். கிராமங்களில் புனருத்தாரண வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் ஜனங்கள் தங்களோடு ஒத்துழைக்க விரும்பினால் அவர்கள் தாங்கள் ஜனங்களுடைய ஊழியர்கள் என்பதை ஜனங்களுக்கு அறியும்படியாக செய்ய வேண்டும். நான் ஜனங்களுடைய ஊழியன், அதனால் இது விஷயத்தில் என்னால் இயன்ற உதவி அனைத்தும் செய்யத் தயாராக இருக்கிறேன்."

சிறு சீர்திருத்தம் பெரிய சீர்திருத்தத்தின் விரோதி—மார்லி.

## கைத் தொழில் திட்டம்

ஹெய்ம்சார் என்னும் கிராமத்தில் ஒரு ஜெப மண்டபம் இருந்தது. அது கலக காலத்தில் இடிக்கப்பட்டு போயிற்று. இப்பொழுது அதை சர்க்கார் திரும்பக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த மண்டபத்தில் காந்தியடிகள் பிப்ரவரி 27.ந்தேதி மாலை தம்முடைய பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தினர். அப்பொழுது அவரிடம் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டன. அந்தக் கேள்விகளும் கூறிய பதில்களும் வருமாறு :-

கேள்வி : பக்கத்திலுள்ளவர்களுக்கும் மனித ஜாதி முழுவதற்கும் ஏககாலத்தில் சேவை செய்ய முடியுமா? சுதேசி என்பதன் உண்மையான பொருள் யாது ?

பதில்: பக்கத்திலுள்ளவர்களுக்கும் மனித ஜாதி முழுவதற்கும் ஏக காலத்தில் சேவைசெய்ய முடியும். ஆனல் பக்கத்திலுள்ளவர்களுக்கு சேவை செய்யும் பொழுது அதில் கொஞ்சம் கூட சுய நலம் கலத்தல் ஆகாது. எந்த விதத்திலும் ஒருவரை ஒருவர் கெடுத்து வாழ்தல் என்பது நடை பெறலாகாது. நாம் பக்கத்திலுள்ளவர்களுக்குச் சேவை செய்தால் அவர்கள் தங்களுக்கு பக்கத்திலுள்ளவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று அறிந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டு போனல் மனித ஜாதி முழுவதற்கும் சேவை செய்ததாக ஆகிவிடும். பக்கத்தில் உள்ளவர்களுக்கு சேவை செய்வதே சுதேசி என்பதாகும். ஆனல் நாம் சேவை செய்யும் பக்கத்திலுள்ளவர் அவருக்கு பக்கத்திலுள்ளவருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் சுதேசிக் கொள்கையில் சுய நலத்துக்கு இடமில்லை என்பது தெரிய வரும்.

கேள்வி:— சர்க்கார் நாட்டிலுண்டாகும் விளை பொருள்களை எவ்வளவு அதிகமாக உபயோகிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக உபயோகிப்பதற்காக தேசத்தில் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் நாட்டில் ஏராளமாக வேலை இல்லாமல் இருக்கும் ஜனங்களை உபயோகிப்பதற்காக திட்டம் போடவில்லை. அதனல் ஜனங்கள் சோம்பலாயிருந்து அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சர்க்கார் திட்டங்களை சுதேசிக் கொள்கைக்கு ஒத்ததாக எண்ண முடியுமா?

பதில்:— கேள்வியை சரியானபடி கேட்டிருக்கிறீர்கள். சர்க்காருடைய திட்டம் என்னவென்று எனக்கு நிச்சயமாக தெரியாது. ஆனல் ஜனங்களை உபயோகியாமல் விளை பொருள்களை மட்டும் உபயோகிப்பதற்காக திட்டம் போட்டால் அது நன்மை தராது என்பதையும் அதுமனிதர்களிடையே சமத்துவத்தை ஒரு நாளும் ஏற்படுத்தாது என்பதையும் மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். உலகத்தில் அமெரிக்காவே கைத்தொழிலை அதிகமாக அபிவிருத்தி செய்த தேசம். அப்படி இருந்தும் அங்கும் தரித்திரம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கு காரணம் ஜனங்களை அலட்சியம் செய்துவிட்டு சில மனிதர்கள் மட்டும் பிறரைக் கெடுத்து பணம் குவித்து வருவதே யாகும். அதனல் அங்குள்ள கைத்தொழிலானது அமெரிக்காவிலுள்ள ஏழைகளுக்கும் உலகத்திலுள்ள இதரமக்களுக்கும் கேடாக ஆகியிருக்கிறது.

அந்த கதி இந்தியாவுக்கு வராமல் தடுக்க வேண்டுமானல் நாம் அமெரிக்காவிலும் மற்ற மேல் நாடுகளிலும் காணப்படும் நல்ல அம்சங்களை கைக்கொண்டு அவர்களுடைய பகட்டான தீமை செய்யும் பொருளாதார கொள்கைகளை விட்டுவிடவேண்டும். ஆதலால் இந்தியாவிலுள்ள மனித சக்தி முழுவதையும் சிறந்த முறையில் உபயோகிப்பதும் விளை பொருள்களை அயலிடங்களுக்கு அனுப்பி பெரும் பணம் கொடுத்து செய்பொருள்களை திரும்ப வாங்குவதற்குப் பதிலாக அந்த விளைபொருள்களை இந்தியாவிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கிடைக்கும்படி செய்வதுமே இந்தியாவுக்கு வேண்டிய உண்மையான கைத்தொழில் திட்டமாகும்.

### ராம ராஜ்யம்

மகாத்மா காந்தியடிகள் ஹெய்ம்சார் கிராமத்தில் தங்கியிருந்த பொழுது ஒரு நாள் மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ராம ராஜ்யத்தைப் பற்றி கீழ்க்கண்டவாறு கூறினர் :—

“இந்தியாவில் ராமராஜ்யம் ஸ்தாபிதம் ஆவதை கண்ணல் காண ஆவலுடையவனய் இருக்கிறேன். நான் “ராம ராஜ்ய” மென்று கூறும்பொழுது ஹிந்துக்களுடைய ஆட்சி ஏற்படவேண்டுமென்று கூறுவதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். நான் ராமன் என்று கூறுவது குதா அல்லது கடவுள் என்பதற்கு நான் கூறும் வேறு பெயரே யாகும். ஆதலால் நான் பூலோகத்தில் கடவுளுடைய ராஜ்யம் அல்லது குதா ராஜ்யம் ஏற்படவேண்டுமேன்றே விரும்புகிறேன். இதற்கு சமானமான ராஜ்யம் ஆதி காலிப்புகள் நால்வர் ஆட்சியில் ஏற்பட்டிருந்தது. அத்தகைய ராஜ்யம் ஏற்பட்டால் அதனல் இந்தியாவிலுள்ள ஜனங்கள் எல்லோருக்கு மட்டுமே க்ஷேமம் உண்டாகும் என்பதன்று. உலகத்திலுள்ள சகல ஜனங்களுக்கும் க்ஷேமமுண்டாகும்.”

### அரசதம்பதிகளின் தென்னுப்பிரிக்க விஜயம்

காந்தியடிகள் இது சம்பந்தமாக கீழ்க்கண்ட அறிக்கையை பிப்ரவரி மாதம் 28-ந் தேதி வெளியிட்டார் :-

“தென்னுப்பிரிக்காவிலுள்ள காங்கிரசும் ட்ரான்சுவால் இந்திய காங்கிரசும் ஆப்ரிக்கர்களுடைய தேசீய காங்கிரசும் வெள்ளையரல்லாத மக்களின் ஸ்தாபனங்களும் அரச தம்பதிகள் தென்னுப்ரிக்காவுக்கு வரும்பொழுது அவர்களை கௌரவிப்பதற்காக நடத்தப் பெறும் விழாக்களில் எந்தவிதத்திலும் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்திருப்பதாக எனக்கு நேட்டால் இந்திய காங்கிரசிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. ஆசியாக்காரர்கள் ஆப்ரிக்கர்கள் வெள்ளையரல்லாத இதர மக்கள் இவர்களுக்கு தென்னுப்பிரிக்க சர்க்கார் இழைத்துள்ள அநீதிகளை உத்தேசித்து தென்னுப்ரிக்காவிலுள்ள வெள்ளை மக்களுடைய சந்தோஷ கொண்டாட்டங்களில் கலந்து கொள்வது சரியில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

அவர்கள் அப்படிக் கலந்து கொள்ளாம விருப்பதற்கு பகிஷ்காரம் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த பகிஷ்காரத்தை நான் ஆமோதிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அந்த பகிஷ்காரம் சுய மரியாதையுள்ள எந்த ஜனங்களும் செய்ய வேண்டிய கௌரவமான ஒரு செயல் என்பதை நான் பகிரங்கமாக கூறி அதை நான் ஆதரிக்கின்றேன்.”

### நிர்மாணத் திட்டம்.

மாகாண காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்களும் காரிய தரிசிகளும் பிப்ரவரி மாதம் 22-ம் தேதி வரை அலகாபாத்தில் மகாநாடு கூடி கீழ்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்:—

(1) அகில இந்திய சர்க்கா சங்கமும் அகில இந்திய கிராமக் கைத்தொழிற் சங்கமும் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கமும் காங்கிரஸ் மகா சபையால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள். அவைகள் காங்கிரஸ

சத்தியத்தைக் கூறச் சக்திபெறுவதே சமத்துவத்தின் சாரம்—ஹோம்ஸ்.

மகா சபை வகுத்துள்ள முறையிலேயே வேலை செய்து வந்திருக்கின்றன என்பதை இந்த மகா நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டியாருக்கு ஞாபகப் படுத்துகிறது.

மத்திய அரசாங்கத்தாரும் மாகாண அரசாங்கத்தார்களும் பொருளாதார திட்டங்களையும் சமூகத்திட்டங்களையும் கல்வித் திட்டங்களையும் பெரிய அளவில் நிறை வேற்ற ஆரம்பித்திருப்பதால் காங்கிரஸின் கட்டளைக்கு கீழ்ப்படிவதாக வாக்களித்துள்ள மத்திய அரசாங்கத்தாரையும் மாகாண அரசாங்கத்தாரையும் தாங்கள் வகுக்கும் திட்டங்களை நிறை வேற்றி வைக்குமாறு காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கட்டளை யிடவேண்டும்.

நிர்மாணத் திட்டத்தின் பிரதான நோக்கம் ஜனங்களை கூட்டுறவு முறையிலும் பஞ்சாயத்து முறையிலும் தங்கள் அரசியல், சமூக, பொருளாதார வாழ்வை திருத்தியமைத்து பிறரைச் சாராமல் வாழும்படி செய்வதேயாகும்.

ஆதலால் இப்பொழுது நிர்மாணம் செய்ய வேண்டிய நிர்மாணத்திட்ட கமிட்டிகளின் முதல் வேலை இந்தக் காரியத்தை செய்வதேயாகும். இந்தக் கமிட்டிகள் அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வரவேற்கலாமாயினும் அவைகள் இயன்ற மட்டும் ஜனங்களுடைய உதவியைக் கொண்டே திட்டத்தை நிறை வேற்ற முயல வேண்டும்.

(2) மத்திய நிர்மாணத்திட்ட கமிட்டி என்று ஒரு சிறு கமிட்டியை நியமித்து காங்கிரஸ் ஸ்தாபனத்தையும் பொது ஜனங்களையும் கதர், கிராமக் கைத் தொழில்கள், மூலாதாரக் கல்வி, ஹரிஜன் வேலை, முதியவர் கல்வி ஆகிய காரியங்களை நிறை வேற்றும்படி செய்யவேண்டுமென்று இந்த மகா நாடு காரியக் கமிட்டியை வேண்டிக் கொள்கிறது. அந்தக் கமிட்டியிலுள்ள ஒவ்வொரு மெம்பரும் ஒரு குறிப்பிட்ட வேலையை எடுத்துக்கொண்டு கவனித்து வரவேண்டும்.

அந்தக் கமிட்டியின் வேலை நன்ருக நடை பெறுவதற்காக இந்த மகாநாடு கீழ்க்கண்ட சிபார்சுகளை செய்கிறது.

(அ) அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில் நிர்மாணத்திட்ட இலாகாவை பரிபாலனம் செய்வதற்காக ஒரு காரியதரிசி நியமிக்கப் படவேண்டும்.

(ஆ) ஒவ்வொரு மாகாண காங்கிரஸ் நிர்வாக கமிட்டியும், ஒரு சிறு கமிட்டியை நியமிக்க வேண்டும். அதில் அகில இந்திய சர்க்கா சங்கம், அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கம், ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம், இவற்றின் மாகாண கிளைகளின் பிரதிநிதிகள், அங்கத்தினர்களாக இருக்கவேண்டும். பிற விஷயங்களை நிறைவேற்றும் விஷயத்தில் இந்த கமிட்டி தனக்கு உதவி செய்ய தனக்கு இஷ்டமான அங்கத்தினர்களை சேர்த்துக் கொள்ளலாம்.

நிர்மாண ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாக இல்லாத அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் நிர்மாணத்திட்டத்தில் கண்ட ஒவ்வொரு விஷயத்தை கவனித்து வர வேண்டும்.

(இ) அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் மாகாண காங்கிரஸ் நிர்வாக கமிட்டியுடன் கலந்து கொண்டு ஒவ்வொரு மாகாணத்திலும் அமைக்கப் பெறும் நிர்மாணத் திட்ட இலாகாவுக்கு முழு நேரம் வேலை செய்யக்கூடிய ஒரு காரியதரிசியை நியமிக்க வேண்டும். அவருக்கு ஊதியம் கொடுப்பதாயிருந்தால், அகில அந்திய காங்கிரஸ் கமிட்டியே கொடுக்க வேண்டும். மற்றச் செலவுகளை எல்லாம் மாகாண கமிட்டியே செய்துவர வேண்டும்.

(ஈ) மாகாண நிர்மாணத்திட்ட கமிட்டி திட்டத்தை நிறைவேற்று வதற்காக அவசியமான ஸ்தாபனங்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(உ) நிர்மாணத் திட்டத்தில் கண்ட வேலைகளை செய்வதற்காக ஊழியர்களுக்கு பயிற்சி யளிக்க வேண்டும. அதை அகில இந்திய சர்க்கா சங்கம், அகில இந்திய கிராம கைத்தொழில் சங்கம், தாலிமி சங்கம் இவற்றின் மூலம் செய்யவேண்டும். அவற்றிற்குரிய செலவை மாகாண கமிட்டியே பொறுத்துக் கொள்ள வேண்டும்.

(3) செய்ய வேண்டிய வேலைகள் வருமாறு :—

(அ) **கதர்** :—காங்கிரஸ் சப் கமிட்டி சுய தேவை திட்டத்தை மட்டுமே கவனித்துக் கொள்ள வேண்டும். தேசீய வருஷம் ஏப்ரல் 13-ம் தேதி முடிவடைவதால் 13-4-48-க்குள் சுய தேவை திட்டப்படி ஒரு லக்ஷம் நூற்பவர்களை தயாரிக்க வேண்டும். இத்திட்டத்தை 6-4-47 முதல் ஆரம்பிக்க வேண்டும்.

(ஆ) **கிராமக் கைத் தொழில்கள்** :—காங்கிரஸ் சப் கமிட்டி உணவு, உடை மற்றும் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தை மட்டும் மேற்கொள்ள வேண்டும். அதற்காக லட்சம் ஜனங்களுக்கு அதிகப்படாத சிறு பிரதேசங்களில் போதுமான போஷணையுள்ள உணவுப் பொருள்களை போதுமான அளவில் உற்பத்தி செய்ய ஆரம்ப வேலை செய்ய வேண்டும்.

அந்த இடத்தில் ஆடு மாடுகள் உற்பத்தி செய்யவும் பால் உற்பத்தி செய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும். கிராமக் கைத்தொழில்களில் வெல்லம் செய்தல் எண்ணை யாட்டுதல் நெல் குத்துதல் மாவு திரித்தல் ஊறுகாய் தயாரித்தல் போன்ற கையால் செய்யும் கைத்தொழில்களையே முதன் முதலாக ஆரம்பிக்க வேண்டும்.

காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் எல்லோரும் கையால் செய்த பொருள்கள் கிடைக்குமானல் அவைகளையே உபயோகிக்க வேண்டும். மகாண காங்கிரஸ் கமிட்டி ஏதேனும் ஒரு இடத்திலாவது ஐந்து மூலாதார பாடசாலைகளுக்கு குறையாமல் ஏற்படுத்தவும் இவைகளை ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தின் யோசனையின்படி நடத்தவும் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு மாகாணக் கமிட்டியும் முதியவர் கல்வியை எவ்வளவு தூரம் பரப்ப முடியுமோ அவ்வளவு தூரம் பரப்ப வேண்டும். அத்துடன் கிராம ஜனங்களிடையே தேசீய மனப்பான்மையை பரப்புவதற்கும் முயற்சிகள் செய்யப் பட வேண்டும்.

(உ) ஒவ்வொரு மாகாண சபையும் பிரஜா உரிமைகளைப் பெறும் வேலைகளையும் சமூகத் தடைகளை நீக்கும் வேலையையும் மேற்கொள்ள வேண்டும்.

ஹரிஜனங்கள் ஆதிவாசிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் சமூக சமத்து உண்டாக்குவதற்காக ஜனங்களிடையே பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். சகல மக்களையும் சரிசமமாக நடத்துவதாக ஜனங்களிடம் தனித்தனியாக உறுதி மொழிப் பத்திரம் எழுதி வாங்க வேண்டும்.

(ஊ) கிஸான் (விவசாயிகள்):—இது ஒரு முக்கியமான இலாகா. இந்த இலாகா விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள ஏராளமான பிரச்னைகளை ஆராய்ந்து அவர்களுடைய அரசியல் சமூக பொருளாதார நன்மைக்கு வேண்டிய நிர்மாண வேலைகளை ஸ்தாபன ரீதியாக செய்ய வேண்டும்.

**விளம்பரம்** :—இந்த நிர்மாணத் திட்ட இலாகாவின் வேலை நாளுக்கு நாள் அளவிலும் முக்கியத்திலும் அதிகமாக வளர்ந்து கொண்டுவரும். அது பல வேறு

**மனிதவாழ்க்கையும் மரங்களின் இலையும் ஒன்றே. இரண்டும் உதிர்ந்து விழுபவையே.**

விஷயங்களைப்பற்றி அறிக்கைகள் தயாரித்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு சமர்ப்பிக்க வேண்டும். மாதந்தோறும் ஒரு அறிக்கை வெளியிட வேண்டும். அதில் தீர்மானங்களும் உத்தியோக தோரணையில் செய்த முடிவுகளும் மட்டும் காணப்பட்டால் போதாது. இந்த இலாகா காங்கிரஸ்கமிட்டிகளுக்காகவும் ஊழியர்களுக்காகவும் வேறு நூல்களும் பிரசுரிக்க வேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படக்கூடியபிரச்னைகளை குறித்து விசேஷ நூல்கள் தயாரிக்கப் பட வேண்டும்.

**காங்கிரஸ் தொண்டர் படை** :— நாடெங்கும் தொண்டர் படை ஏற்பட வேண்டியது அவசியமாகும். அவர்கள் முழுநேரம் வேலை செய்ய வேண்டியதில்லை அவர்களுக்கு சமூக வேலைகளில் பயிற்சியளிக்க வேண்டும்.

**சிறுபான்மையோர்** :— சிறுபான்மையோரைப் பற்றியும் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியும் இடைவிடாமல் எழுந்துகொண்டிருக்கின்றபிரச்னைகளைநன்றாகஆராய வேண்டியது அவசியமாகும். எந்தவிதமாக குறைகளை தீர்ப்பது என்பதைக் குறித்து இந்த இலாகா சிந்திக்க வேண்டும். இது சம்பந்தமாக எத்தகைய நூல்களை வெளியிடலாம் என்பதைப் பற்றியும் ஆலோசனை செய்ய வேண்டும்.

**தொழிலாளர்கள்** :— இது முக்கியமான பிரச்சினை. இதைச் சீக்கிரத்தில் பயனுற போதிய அறிவுடன் தீர்த்து வைக்க வேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் மகா சபை தன்னுடைய தொழிலாளர் கொள்கையை வகுத்திருக்கிறது.

மாகாணக் கமிட்டிகள் அந்தை நிறைவேற்றுவதற்கான காரியங்களை செய்ய வேண்டும்.

**சட்டசபை விஷயம்** :—சட்ட சபை விஷயமாக எழுகின்ற பிரச்னைகள் எல்லாம் தீர்த்து வைப்பதற்காக ஒரு தனி இலாகாவை அமைக்க வேண்டும்.

இங்கே வகுத்துக் காட்டப்பட்டிருக்கும் வேலைத் திட்டத்தை சீக்கிரமாகவும் பயன்தாக் கூடியதாகவும் நிறைவேற்றி வைப்பதற்காக மாகாண ஜில்லா கமிட்டிகளும் கிராமங்கள் தோறும் தகுந்த கிராமக் கமிட்டிகளை அமைக்க வேண்டியது அவசியமாகும். நாம் வேலை துவக்கும இந்த முதல் வருஷத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் கால்வாசி கிராமங்களிலாவது நன்றாக வேலை செய்யக் கூடிய கிராமக் கமிட்டிகள் அமைக்கப்படும் என்று நம்புகிறோம்.

நம்முடைய காங்கிரஸ் கமிட்டிகள் இந்த விரிவான நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றி வைத்தால் காங்கிரசின் பலமும் சத்தியும் பெருகும் என்றும் அதைக் கொண்டு இந்திய மகா ஜனங்களுடைய அரசியல் சமூக பொருளாதார சுதந்திரத்தை பரிபூரணமாக பெற்றுவிட முடியுமென்றும் சுய ஆட்சி செய்யக் கூடிய கஷ்டமான பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள சக்தி உண்டாகும் என்றும் இந்த மகா நாடு உறுதியாக நம்புகிறது.

## நிலத்துக்கு வேண்டியது உணவா? உத்சாகப் பொருளா?

நாம் உணவு உண்ணும் விஷயத்தில் பிரதானமான உணவுப் பொருள் இது என்றும், மருந்துவகைகள் இதுவென்றும் வித்தியாசம் ஏற்படுத்தியிருக்கிறோம். சாதாரணமாக ஜனங்கள் பிரதானமான உணவுப் பொருள்களையே அதிகமாகச் சாப்பிடுகிறார்கள். அதில் உடம்புக்கு வேண்டிய சகலபோஷணை சத்துக்களும போதுமான அளவில் காணப்படும். உதாரணமாக பாலில் கொழுப்பு ஊன் சத்து சுண்ணும்புச் சத்து ஜீவசத்து இவைகள் காணப்படுகின்றன. ஆனால் எந்தக் காரணத்தினலாவது பாலில் காணப்படும். ஏ. ஜீவசத்து உடம்புக்கு அதிகமாக தேவையாக இருந்தால் டாக்டர்கள் நோயாளிக்கு மீன் நெய் போன்ற வஸ்துக்களை கொடுப்பார்கள். ஆகவே உணவு வேறு, மருந்து வேறு என்பது புலனகும். மருந்துகள் நோயாளியின் அவசியத்துக்கும் நிலைமைக்கும் தக்கவாறு சிறிய அளவில் கொடுக்கப் படும். வயதானவர்க்கு கொடுப்பதை விட நடுத்தர வயதினர்க்கு அதிகமாகவும் குழந்தைகளுக்கு குறைவாகவும் கொடுக்கப்படும்

இரவில் கூத்துக்கள் போன்ற களியாட்டங்களில் ஈடுபடுவதற்காக தங்களுக்கு இயற்கையில் உண்டான சக்தியைவிட அதிகமான சக்தியை விரும்புவார்களானல் அதற்காக அவர்கள் சில மருந்துகளை உற்சாக மூட்டும் வஸ்துக்களாக உபயோகிப்பார்கள். உதாரணமாக மார்பியா (அபின்) போன்ற இஞ்செக்ஷன்களை செய்து கொள்வார்கள். அப்படிச் செய்து கொண்டால் அந்தச் சமயத்துக்கு அதிகசக்தியும் உத்சாகமும் பெற்றது போல் தோன்றுவார்கள். ஆனல் சிறிது நேரம் ஆனபிறகு அவ்வளவுக்கவ்வளவு சக்தியும் உத்சாகமும் குறைந்து போவார்கள். ஆதலால் தங்கள் உடம்பை அளவுக்கு மிஞ்சி சிரமப்படுத்தாமல் ஒழுங்காக வாழ விரும்புகிறவர்கள் உணவினல் பெறக்கூடிய சக்தியையும் உத்ஸாகத்தையுமே நம்பியிருப்பார்கள்.

மருந்துகள் உட்கொள்ள வேண்டிய காலம் நோய் ஏற்படும் போதுதான். உத்ஸாக மூட்டும் வஸ்துக்கள் உடம்பை அதிகமாக அளவுக்கு மிஞ்சி வேலை செய்யும்படி செய்து விடுவதால் அவைகள் உடம்புக்கு தீமை விளைவிக்கின்றன. நாம் உட்கொள்ளும் பொருள்கள் உணவு, மருந்து, உத்ஸாக மூட்டும் பொருள் என்று மூன்று வகைப்படும். ஒவ்வொன்றையும் உபயோகிக்க வேண்டிய சமையம் வேறு வேறு ஆகும். நோயில்லாத சாதாரண காலத்தில் உணவை உபயோகிக்க வேண்டும், நோயாளிகள் மருந்து உண்பார்கள். அளவுக்கு மிஞ்சி உடம்பை சிரமப்படுத்த விரும்புகிறவர்கள் உத்ஸாக மூட்டும் பொருள்களை உபயோகிப்பார்கள்.

ஆவர வர்க்கங்களுடைய வாழ்விலும் இந்த மூன்று வகை பொருள்கள் உண்டு. மிருகங்களை போலவே தாவரங்களுக்கும் உணவு தேவையாகும். அவைகள் தங்களுக்கு வேண்டிய உணவை காற்றிலிருந்தும் பூமியிலிருந்தும் கிரகித்துக் கொள்கின்றன. அவைகளுக்கு ஏதேனும் ஒரு போஷணை வஸ்து குறைவாக கிடைக்குமானல் அது எதுவென்று ஆராய்ந்து அதை அதற்கு கொடுக்க வேண்டும். உத்ஸாக வஸ்துக்களை கொண்டு மனிதர்களை உத்ஸாகப்படுத்துவது போலவே தாவரங்களையும் உத்ஸாகப் படுத்தலாம். ஆனல் அது இயற்கைக்கு விரோதமான காரியம். இயற்கையில் தாவரங்களுக்கு வேண்டிய உலோக சத்துக்களை எல்லாம் மண்ணிலுள்ள கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் தாவரங்கள் கிரகிக்க கூடிய முறையில் தயாரித்துக் கொடுக்கின்றன. இந்த நுண்ணுயிர்கள் உயிருள்ள வஸ்துக்களை பிரித்து தாவரங்களுக்கு ஏற்ற விதத்தில் தருகின்றன. மிருகங்கள் தாவரங்களை தின்று தங்களுக்கு வேண்டியதை ரத்தமாக்கிக் கொண்டு மீதியை மண்ணில் சேரும்படி செய்து விடுகின்றன. அதை மண்ணிலுள்ள நுண்ணுயிர்கள் பக்குவம் செய்து தாவரங்களுக்கு உணவாக உதவுகின்றன. இவ்விதம் தாவரங்களால் மிருகங்களும் மிருகங்களால் தாவரங்களும் உயிர்வாழ்ந்து வருகின்றன. இந்த முறையில் மனிதன் தலையிடுவதானல் தக்க காரணங்கள் இருக்க வேண்டும். இல்லையானல் தீமையே விளையும்.

சகல தாவரங்களுக்கும் இயற்கையில் அமைந்த பிரதான உணவு சாணமும் பிற ஜீவ வஸ்துக்களுமே யாகும். மனிதனுடைய உணவு வைட்டமின் என்னும் ஜீவ வஸ்துக்களால் உடம்பில் சேருவது போலவே இந்த உரங்கள் அவைகளிலுள்ள ஆக்ஸின் என்னும் ஜீவ சத்துக்களால் தாவரங்களினுடைய உடலில் சேருகின்றன. மனிதர்களுக்கு எப்படி வைட்டமின்கள் அவசியமோ அதே போல் தாவரங்

களுக்கு ஆக்சின்கள் அவசியமாகும். இந்த ஆக்சின்கள் சாணத்திலும் பிற ஜீவ வஸ்துக்களிலுமே அதிகமாகக் காணப்படுகின்றன.

தண்ணீர் அதிகமாக பாய்ச்சுவதால் மண்ணிலுள்ள உலோகச் சத்துக்கள் தாவரங்களுக்கு கிடைக்க வேண்டிய அளவு கிடைக்காமல் போகக் கூடும். அந்தச் சமயங்களில் தாவரங்களுக்கு அந்த லோகச் சத்துக்களை ரஸாயனப் பொருள்கள் மூலம் கொடுக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இப்படிச் செய்வது மனித உடம்புக்கு மருந்து கொடுப்பது போன்றதாகும். மருத்துவம் அறிந்த டாக்டர்தான் நன்றாக பரிசோதித்தபின் நோயாளியின் நிலைமைக்குத் தக்க மருந்து இதுவென்று கண்டு மருந்து கொடுக்க வேண்டும். அதுபோல தாவரங்களுக்கு ரஸாயன உரங்கள் இடவேண்டுமானால் மண்ணை நன்றாக ஆராய்ந்து பார்க்கவும் அதிலுண்டாக்கும் பயிர்களுக்கு எத்தகைய உரங்கள் தேவை என்பதை கண்டு பிடிக்கவும் வேண்டும். இதை மண் சம்பந்தமாக ஆராயக் கூடிய ரஸாயன சாஸ்திரிதான் செய்ய முடியும். அவருடைய யோசனையைக் கேளாமல் நாமாக ரஸாயன உரங்களை உபயோகிப்பது மருத்துவரல்லாதவர் நோயாளிக்கு மருந்து கொடுப்பது போன்றதாகும். அப்படி மருந்து கொடுத்தால் எப்படி தீங்கு விளையுமோ அப்படியே அந்த உரங்களிட்டாலும் தீமை விளையும். ஆதலால் ரஸாயன உரங்களை தாவரங்களின் உணவாக கருதாமல் நிலத்துக்கு இட வேண்டிய மருந்துகளாகவே கருத வேண்டும். எப்படி மார்பியா போன்ற உத்சாக வஸ்துக்களால் மனித உடலை அளவுக்கு மிஞ்சி வேலை செய்யும்படி செய்ய முடியுமோ அது போலவே உத்ஸாக வஸ்துக்களால் செடிகளையும் அளவுக்கு மிஞ்சி வளரவும் பயன்தரவும் செய்யலாம். ஆனால் அது இயற்கைக்கு விரோதமானதும் கேடு தருவதும் குறுகிய திருஷ்டி உள்ளதுமான காரியமாகும். விவசாயத்தின் மூலமாக உண்டாக்கப் படும் உணவுப் பொருள்களைக் கொண்டு மனித உடலுக்கு வேண்டிய போஷணைச் சத்துக்களை பெற வேண்டுமானால் உணவைத் தரும் செடிகளும் ஆரோக்கியமாகவும் நன்றாக போஷிக்கப் பட்டதாகவும் இருக்க வேண்டும். செடிகளுக்கு உத்ஸாக மூட்டும் வஸ்துக்களை கொடுத்து வந்தால் அவைகள் உண்டாக்கும் உணவுப் பொருள்கள் பாதிக்கப் படும். ஆதலால் தாவரங்களுக்குக் கொடுக்கப் படும் உணவுகள் யாவை? மருந்துகள் யாவை? உத்சாகப் பொருள்கள் யாவை என்று கவனிக்க வேண்டியது அத்தியாவசிய மாகும். எந்தப் பொருளையேனும் அளவுக்கு மிஞ்சி கொடுத்தால் அந்த அளவுக்கு அந்த உணவை உண்ணும் மக்களுடைய ஆரோக்கியம் பாதிக்கப் பட்டு விடும்.

நியூஸீலண்டு தேசத்தில் உணவுப் பொருள்களில் பெரும்பாகம் ரஸாயன உரங்களின் உதவியினலேயே உற்பத்தி செய்யப் படுகின்றன. அங்குள்ள ஜனங்கள் புத்து நோய், தொண்டைப்புண், பல் புழுவெட்டு போன்ற வியாதிகளுக்கு ஆளாகிறார்கள். ஆதலால் நியூஸிலண்டிலுள்ள தேக ஆரோக்கிய சங்கத்தை சேர்ந்த டாக்டர் சாப்மென் என்பவர் அங்குள்ள ஹாஸ்டல் பிள்ளைகளைக் கொண்டும் ஆசிரியர்களை கொண்டும் ஆராய்ச்சிகள் நடத்தினர். முதலில் அவர்களுக்கு ரஸாயன உரங்களால் விளைந்த பழங்களையும் காய்கறிகளையும் கொடுத்தார். பிறகு அவற்றைக் கொடாமல் சாணத்தால் விளைந்த பழங்களையும் காய்கறிகளையும் கொடுத்தார். அதன் பயனாக அவர் "சாணத்தால் விளைந்த உணவுப் பொருள்களை உண்டவர்களுக்கு சாதாரண நோய்கள் அதிகமாக வரவில்லை. அவர்கள் வளர்ச்சி அதிகமாயிருந்தது. அவர்களுடைய பற்கள் நல்ல நிலைமை பெற்றது" என்று கூறுகிறார். சென்ற யுத்தத்தில் நியூஸிலண்டில் இளைஞர்களை பட்டாளத்தில் சேர்த்துக் கொள்வதற்காக பரிசீலனை செய்த பொழுது 100-க்கு 40 பேருடைய பற்கள் நல்ல நிலைமையில் இருக்கவில்லை. இதை எச்சரிக்கையாக கொண்டு நாமும் ரஸாயன உரங்களை உபயோகிப்பதில் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். இவ்வளவும் நம்முடைய உணவையும் ஆரோக்கியத்தையும் பொருத்ததாகும்.

இனி நிலத்தைக் கவனிப்போம். ரஸாயன உரங்கள் மண்ணின் புளிப்புச் சத்தை அதிகரிக்கின்றன. இந்தக் கேடு வங்காளத்தில் சில பாகங்களிலும் பீஹாரில் சில பாகங்களிலும் இப்பொழுதே உண்டாகி இருக்கின்றது. ரஸாயன உரங்களை பயனுற உபயோகிக்க வேண்டுமானல் அவைகளை நிலத்தின் மேலே தூவினல் போதாது. ஆழத்தில் பதியும்படி போட வேண்டும். அப்படிச் செய்ய வேண்டுமானல் ஆழமாக உழவும் வேண்டும். அதிகமாக நீர் பாய்ச்சவும் வேண்டும். ஆனால் நம் நாட்டிலோ பெரும் பாகம் மழையைப் பார்த்து மயங்கி நிற்க வேண்டிய நிலைமையில் இருக்கிறது. ஆதலால் விலை யுயர்ந்த உரங்களை உபயோகிப்பதும் அதற்காக ஆழமாக உழுவதும் இறுதியில் மழை இல்லாமல் பயிர்கள் கருகுவதும் ஒரு பெரும் சூதாட்டம் போன்றதேயாகும். இந்த அபாயத்தை ஏற்கக் கூடிய அளவு அதிக பொருள் வசதி உள்ளவர்களாக இல்லை நம்முடைய விவசாயிகள்.

நாம் முன்னல் கூறியபடி ரஸாயன உரங்களை உபயோகிக்க வேண்டுமானல் மண்ணைப் பரிசோதிக்க வேண்டும். அந்த மண்ணுக்கு எந்த உரம் ஏற்றது என்று கண்டு பிடிக்க வேண்டும். இதற்கு நில டாக்டர்கள் போல உதவி செய்யக் கூடிய விவசாய ரசாயன சாஸ்திரிகள் தேவை. அவர்கள் நல்ல பயிற்சி பெற்றவர்களாகவும் நாடெங்கும் கிடைக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அத்தகைய நிபுணர்கள் கிடைக்காமலிருக்கும்பொழுது விவசாயிகளிடம் ரஸாயன உரங்களை கொடுப்பது முழு முட்டாள்தனமாகும். அபின், மார்பியா போன்ற விஷ வஸ்துக்களை விஷய மறியாத நோயாளிகளிடம் அவர்களாகவே உபயோகித்துக் கொள்ளும்படி கொடுப்பது போன்றதாகும். ஆதலால் ரஸாயன உரங்களை மருந்து போல் உபயோகிக்க விரும்பினலுங் கூட விவசாய ரஸாயன நிபுணர்களை ஏராளமாக உற்பத்தி செய்ய வேண்டியது இன்றியமையாத முதல் நிபந்தனையாகும். ஆனல் நம் நாட்டிலோ மனிதர்களுக்கே போதுமான டாக்டர்கள் இல்லை. அப்படி இருக்க நிலங்களுக்கு வேண்டிய டாக்டர்களை எங்கிருந்து பெறப் போகின்றோம்?

நம்முடைய மத்திய அரசாங்கத்தார் இந்த விஷயங்களைப் பற்றி சிந்தித்துப் பார்க்காமல் ரஸாயன உரங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்கு முனைந்து கொண்டு இருப்பது வருத்தம் தருகிறது. பீஹாரிலுள்ள சிந்திரி என்னும் இடத்தில் ரஸாயன உர உற்பத்தி சாலைகள் அவசரமாக அமைக்கப்பட்டு வருகின்றன. அங்கே 12 கோடி ரூபாய் பெறுமான அன்னிய நாட்டு மிஷின்கள் உபயோகப்பட போகின்றன. இப்பொழுதேனும் விஷயத்தை சிந்தித்துப் பார்த்து இந்தத் தற்காலத் திட்டங்களை கைவிட்டு விட்டு வீணாய்ப் போய்க்கொண்டிருக்கின்ற சாண உரத்தை எப்படி நிலங்களுக்கு அதிகமாய் கிடைக்கச் செய்யலாம் என்ற விஷயத்தை ஆராய்வார்கள் என்று நம்புகிறோம். அப்படி செய்தால்தான் நமக்கு ஆரோக்கியம் தரக்கூடிய உணவு கிடைக்கும். தங்களுக்கு பணம் தேடுவதையே வாழ்வின் தனிப்பெரும் லட்சியமாக கொண்டுள்ள அயோக்கியர்கள் ஜனங்களுக்கு செய்துவரும் தீயதான சுரண்டல் காரியங்களும் நடவாமல் இருக்கும்.

ஜே. ஸி. குமரப்பா.

அச்சடித்தவர் பி. அருணசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி., சென்னை
பிரசுரித்தவர்: சின்ன அண்ணமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.